உ

ஸ்ரீவாணீ சகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபேறநில்.

வெண்டாமரை ௭. | 1919-ம் ஆ ஏப்ரல்மீ | இதழ் ௪.

திருக்குறள் வியாசம்.

௧௭-ம் அதிகாரம்.

அழுக்காறாமை.

உள்ளுறை:—(1) அழுக்காறாமை யென்பது. (2) பொறாமை யில்லாமையினது குணம். (3) பொறாமை யுடைமையினது குற்றம். (4) கேடும் ஆக்கமும் வருதற்குக் காரணம். (5) முடிவுரை.

விளக்கம்.

அழுக்காறென்பது ஒரு சொல். பிறராக்கம் பொறாமை யென்பது அதன் பொருளாகும். அச்சொல் பின் அழுக்காற்றைச் செய்யாமை யென்னும் பொருள்பட எதிர்மறை ஆகாரமும் மகரவைகார விகுதியும் பெற்று அழுக்காறாமை யென நின்றது. எனவே பிறர்செல்வம் முதலானவை கண்டவிடத்துப் பொறாமைப் படாமை யென்பதே அழுக்காறாமை யென்பதன் பொருளாகும்.

உலகில் அழுக்காறு (பொறாமை) போல ஒருவனுக்குக் கேடு பயக்கத்தக்கது வேறொன்றில்லை. எல்லாக் கேடுகளையும்

அது ஒன்றே தாவல்லது. இத்தீயகுணம் தம்பால் அணுகாம லிருக்கும்படி ஒவ்வொருவரும் விழிப்புடையராய் இருத்தல் வேண்டு மன்றோ! ஆகலின், *'ஒருவன் தன் நெஞ்சத்தின்கண் பொறாமை யென்னும் குற்றமில்லாத இயல்பைத் தனக்குச்சொல் லப்பட்ட ஒழுக்க நெறியாகக் கொள்ளக்கடவன்.' அவ்வியல்பு அறிவோடு கூடிய தன்மை. அத்தன்மையும் நன்மை பயத்தலான், ஒழுக்கநெறிபோல உயிரினுஞ் சிறந்ததாகக் காப்பாற்றுதல் வேண் டும். பொறாமை நீங்கினவன் எல்லா நலங்களையும் எளிதில் எய்துகின்றான். பொறாமை நீங்குதலே ஒருவனுக்குச் சிறந்த பேறாகும். †'யாவரிடத்தும் பொறாமையினின்று நீங்குதலை ஒருவன் பெறுவானாயின், மற்றவன் பெறும் மேலான பேறுக ளுள் அப்பேற்றினை யொப்பான தில்லை.' ஆகலின் பகைவர்க ளிடத்தும் பொறாமை கூடாதென்க. இவற்றால் பொறாமை யில் லாமையினது குணம் நன்கு வெளிப்படுகின்றதன்றோ!

இனிப் பொறாமையுடைமையினது குற்றத்தைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். பிறர் செல்வம் முதலியனகண்டு பொறாமை கொள்பவன் ஒருபோதும் நன்மை யடையமாட்டான். அவன் இம்மை மறுமை யின்பங்களை யெய்துவனோ? கருதிப்பார்க்கு மிடத்து, ‡'மறுமைக்கு அறத்தையும் இம்மைக்குச் செல்வத் தையும் தனக்கு வேண்டாதவன் என்று சொல்லப்படுவோன், பிறருடைய செல்வத்தைக் கண்டவிடத்து மகிழாமல் பொறாமைப் படுவான்.' அங்ஙனம் பொறாமைப்படின் தனக்கே துன்பமாம் என்றுணர்க. ஆனதுபற்றித் தான், §'அறிவுடையோர் அத்தீய

---

* ஒழுக்காறாக் கொள்க வொருவன்றன் னெஞ்சத்
அழுக்கா றிலாத வியல்பு.

† விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டு
மழுக்காற்றி னன்மை பெறின்.

‡ அறனாக்கம் வேண்டாதா னென்பான் பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பான்.

§ அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றி
னேதம் படுபாக் கறிந்து.

வழியால் தமக்கு இருமையினும் துன்பம் வருதலை யறிந்து பொறாமை காரணமாக அறமல்லாதவைகளைச் செய்யார்' என்க. செல்வம், கல்வி முதலியன உடையவரிடத்தே தீங்கு நினைத்தலும் சொல்லுதலும் செய்தலுமே அறமல்லாதவை யாகும். பொறாமை யொன்றே பொல்லாங்குக் கெல்லாம் காரணம். பொறாமை யுடையவருக்குத் துன்பம் செய்ய வேறு பகைவரும் வேண்டுமோ? * 'பொறாமையானது பகைவரை யொழிந்தும் கேட்டைத் தருவ தொன்றாகலின், அப் பொறாமை யுடையார்க்குப் பகைவரும்வேண்டா, கேடுபயத்தற்கு அது தானேபோதும்.' உலகில் பிறர் பேறுகண்டு பொறாமை கொள்வோர் சிலரிருக்க, ஒருவர் பிறர்க்குக் கொடுக்கப்படும் பொருளைக்குறித்துப் பொறாமைப் படுவோர்களும் சில ருளர். இவர்களறிவு கிடந்தவாறென்னே! இவர்களடையும் பயனென்னே! † 'ஒருவனால் பிறருக்குக் கொடுக்கப்படும் பொருளைக் குறித்துப் பொறாமைப் படுபவனது சுற்றம் உடுக்கப்படுவதும், உண்ணப்படுவதும் இல்லாமல் கெடும்.' பொறாமை கொள்பவன் சுற்றமானது, உடுக்க ஆடையும் உண்ணச்சோறும் இல்லாமல்கெடும் என்றால் அவனது கெடுதலைப்பற்றி நாம் சொல்லவும் வேண்டுமோ? பிறர் பேறு கண்டு பொறாமைப்படுதல் தன்பேறு மட்டுமே யல்லாமல் தன் சுற்றத்தின் பேறுகளையும் இழக்கச் செய்யு மென்க. அம்மட்டோ! ‡ 'பிறர் செல்வங் கண்டவிடத்துப் பொறாமை யுடையவனைத் திருமகள் தானும் பொறாமைப்பட்டு, தனது தமக்கைக்கு (மூதேவிக்கு)க் காண்பித்து நீங்குவாள்.' ஆகவே அவன் செல்வமிழந்து வறுமைப்படுவா னென்பதற்குத் தடையென்னே? அன்றி

---

* அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்
வழுக்கியுங் கேடீன் பது.

† கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ
முண்பதூஉ மின்றிக் கெடும்.

‡ அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ
டவ்வையைக் காட்டி விடும்.

யும், * 'பொறாமையென்று சொல்லப்பட்ட ஒப்பில்லாத பாவி, தன்னை யுடையவனை இம்மையிலே செல்வத்தைக் கெடுத்து, மறுமையில் நரகத்திற் செலுத்திவிடும்.' இங்ஙனம் இருமைப் பயன்களையும் கெடுக்கின்ற கொடுமையுள்ள பொறாமையைப் போன்ற பாவி வேறொன்றுண்டோ !

உலகத்தில் பொறாமை இல்லாதவர்க்குச் செல்வம் உண்டாதலும், பொறாமை யுள்ளவர்க்கு வறுமையுண்டாதலும் அறத்தின் முறைமை. அங்ஙனமன்றி அதற்கு மாறாகக் காணப்படுமாயின் அதற்குக் காரணம் வேறாயிருத்தல் வேண்டும். அது தான் பழவினை யாகும். ஆனதுபற்றிததான், † 'பொறாமையுள்ள மனத்தை யுடையவனது செல்வமும் பொறாமையில்லாத மனத்தையுடையவனது வறுமையும் உண்டானால் அவை ஆராயப்படும்' என்று பெரியோர் கூறினர். பொறாமையினாலே செல்வமும் பொறாமையில்லாமையினாலே கேடும் உண்டாகுதல் கூடாமையால் அறிவுடையார், இவை யுண்டாதற்கு ஏதுவாகிய பழவினை யாதென்று ஆராய்வா ரென்க. முடிவாகச் சொல்லுமிடத்து, ‡ 'பொறாமைப்பட்டுப் பெரியாராயினாரும் இல்லை, அச்செயல் இல்லாதவருள் பெருக்கத்திலிருந்து நீங்கினவரும் இல்லை.' இது உண்மை. இவற்றால் கேடும் ஆக்கமும் வருதற்கேது வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றதன்றோ !

இத்துணையுங் கூறியவாற்றால், பிறர் பேறுகண்டு பொறாமைப்படாமையே அழுக்காறாமை யென்பதும், பொறாமை யில்லாமையே ஒருவன் தனக்கு நன்னெறியாகக் கொள்ளவேண்டுமென்பதும், பொறாமை நீங்கப்பெறுவதே ஒருவனுக்குச் சிறந்த

---

* அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.

† அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும்.

‡ அழுக்கற் றகன்றாரு மில்லையஃ தில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில்.

வான

பேறென்பதும், பெரியோர் பொறுமையினாற் பாவங்களைச் செய்யாரென்பதும், பொறுமை தன்னையுடையானுக்குக் கேட்டையே தரும் என்பதும், பிறர்கொடுப்பதைக் குறித்துப் பொறுமை கொள்பவன் தன் சுற்றத்தோடு அழிவனென்பதும், பொறுமையுள்ளவன் செல்வம் நீங்கி வறுமை யடைவா னென்பதும், பொறுமை இருமைப் பயன்களையும் கெடுக்கும் என்பதும், பொறுமை யுள்ளவன் செல்வமும் பொறுமை யில்லாதவன் வறுமையும் பழவினையின் றெண்ணப்படு மென்பதும், பொறுமைப் பட்டுச் செல்வம் பெற்றவரும் பொறுமைவிட்டுச் செல்வம் நீங்கினவரும் இல்லை யென்பதும், பிறவும் பெறப்பட்டன.

ஆயுர்வேத வைத்தியப் பகுதி.

சுக்கு.

(வெண்டாமரை எ, இதழ் ௩, 56-ம் பக்கத்தொடர்ச்சி.)

22. தோல் போக்கிய சுக்கு பலம் ஐந்து, ஒன்றிரண்டாய்த் தட்டி, இளநீர்ஜலம் வழுக்கைபற்றுததாய் ஐந்து படி விட்டு ஒருபடி சுண்டவைத்து இறக்கி வடிகட்டிய நாலுபடி கியாழத்தில் புதிதாய்த் தோல் போக்கிய நாலுபலம் சுக்கை நறுக்கிப்போட்டு ஒருபடி சுண்ட எரித்து இறக்கிப் பிழிந்து வடிகட்டிய மூன்றுபடி கியாழத்தில் தோல் போக்கிய மூன்றுபலம் சுக்கைத் தூள்செய்து போட்டு ஒருபடி சுண்ட எரித்துப் பிழிந்து வடிகட்டிய இரண்டுபடி கியாழத்தில் தோல்போக்கிய இரண்டு பலம் சுக்கைத் தூள்செய்துபோட்டு ஒருபடி சுண்ட எரித்துப் பிழிந்து வடிகட்டிய ஒருபடி கியாழத்தில் தோல்போக்கிய ஒருபலம் சுக்குத் தூளைப்போட்டுக் கால்படி சுண்ட எரித்து முக்கால்படியாக இருக்கையில் இறக்கி வைத்து, ஒருவிராகனெடை இந்துப்பு தூள்செய்து போட்டுக்கலந்துகொண்டு காலைமாலையாகத் தினம் இருவேளை ஆகாரத்தின் பிறகு கால் பலம் வீதம் சாப்பிட்டுவர, மந்தாக்கினி ரோகசம்பந்தமான பல பிணிகள் தீர்ந்து ஜாடராக்கினி விருத்தியாகி, முகவசீகரம், தேகபலம், தேகசுகம் முதலிய பல அரிய குணங்களுண்டாகும். இக் கியாழத்தை மண்பாத்திரத்துடன் தினநிதம் காலைதோறும் சற்றுச் சூடுகாட்டிக் கொள்ளவேண்டும். அக்கினிமந்த ரோகமுடையவர்கள் இக்

கியாழத்துடன் கொஞ்சம் வெண்ணெய் அல்லது நெய்சேர்த்துச் சாப்பிட விசேஷ குணந்தரும்.

இது இவ்விதம் தனித்தனியாக 5, 4, 3, 2, 1, பலமாகப் போட்டு எரித்து வருவதால் முதலில் போட்ட ஐந்து பலம் சுக்கின் அளவிற்கும், கடைசியில் போட்ட ஒருபலம் சுக்கின் அளவிற்கும் இடையில் உள்ள தீயின் பேதம், சாக்கின் சத்து இறங்குவதின் ஏற்றத் தாழ்ச்சி இவைகளால் ஓர் புதிய சக்தி யுண்டாகி விசேஷகுணத்தையும், குணத்திற்குத் தக்க பலனையும் தருகின்றது. இப்படித் தனித்தனியாகப் போடும் சுக்கை ஒரே முறையில் பதினைந்து பலமாகப் போட்டு எரித்துச் சாப்பிடுவதில் இக்குணங்கள் உண்டாகவில்லை.

23. தோல் போக்கிய சுக்கு பலம் ஒன்று, தோல்போக்கிய காட்டுக் கருணைக்கிழங்கு பலம் ஒன்று, இவற்றைக் கட்டித் தயிர்விட்டு வெண்ணெய்போ லரைத்து எட்டுபலம் பசுந்தயிரிற் கரைத்து எட்டுபலம் பசுநெய்யில் கலந்து மூன றுநாள் சூரியபுடம் வைத்து நான்காம்நாள் தயிர் சுண்டக்காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு இரவில் மாத்திரம் போஜனத்தின்பிறகு கால்பலம் நெய்வீதம் சாப்பிட்டுவரவும்.

பகலில், வெண்டாமரை (சு) இதழ் (கக.) பக்கம் 247-ல். 6-வது பகுதியிலுள்ள "நாயுருவியிலை"ப் பாகத்தைச் செய்து சாப்பிட்டு வரவும். இப்படி இரவில் சுக்கு நெய்யையும், பகலில் நாயுருவிப் பாகத்தையும் கலந்து கால், அரை, ஒருமண்டலமாகத் தேகத்திற்கும் ரோகத்திற்கும் ஏற்றவாறு சாப்பிட்டுவர, மூல உஷ்ணம், மூல உதிரம், ஆசனத்தின்வு, ஆசனவாயை அரித்துத்தின்னும் சிறு பூச்சிகள், மூலவாயு, அக்கினி மந்தம் முதலியன தீரும்.

இந்த நெய்யைக் குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தால் அக்கிரமலம், வயிற்றுப் பொருமல், உஷ்ணபேதி, கணச்சூடு, மார் எலும்பு தூக்கி யிருத்தல், வயிற்றுப்புளிப்பு, முதலிய உஷ்ணரோகங்கள் தீரும்.

குழந்தைகளுக்காகச் செய்யும் நெய்யில், மேல்கண்ட அளவுக்கு இரண்டு குன்றிமணி எடை இந்துப்பு சேர்த்து அரைத்துக் கொள்ள வேண்டும்.

(தொடரும்).

அ. வேங்கடாசல முதலியார்,
ஆயுர்வேத வைத்தியர்,
திருவண்ணமலை.

பொய்யாமொழிப் புலவர் சரிதம்.

(வெண்டாமரை எ, இதழ் ந, 60-ம் பக்கத் தொடர்ச்சி.)

பின்னர் அங்கு நின்று நீங்கிப் பாண்டியநாட்டைச் சார்ந்ததும் வைகை நதியை யடுத்ததுமான மாறை நாட்டுத் தஞ்சாக்கூர் சேர்ந்து அவ்வூரில் உயர்குடி வாழ்வினனாய், உழுவித்துண்ணும் வேளாண் மாபினனாய், சந்திரன் என்பவனின் தவப்புதல்வனாய், தமிழ்க்கலை முழுதும் கைவரப்பெற்றவனாய், பெருங்கொடை வள்ளலாய், உத்தம நற்குண சீலனாய், ஓங்குபுகழுடையனாய், வணங்கார்முடிப் பாண்டியன் அமைச்சனாய், பகைவரை வெந்நிடச் செய்யும் தீரனாய் விளங்கிய * "தஞ்சைவாணன்" என்னும் பிரபுவை யடைந்து அவனால் நன்குபசரிக்கப்பெற்று அவன் வேண்டுகோளின்படி தொண்டை நாட்டுப் "புளியங்குடி" யிற் பிறந்த உய்யவந்தார் என்பவர் குமாரரும் சைநசமயரும், ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் ஆகிய நாற்கவிகளிலும் வல்லவரானது பற்றி "நாற்கவிராசநம்பி" என்னுங் காரணச் சிறப்புப்பெயர் வகித்தவருமான நம்பியென்னும் இயற்பெயருடையவர் அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என்னும் ஐவகை இயல்களுடன் அகப்பொருட்டுறையில் இயற்றிய இலக்கண நூலுக்கு இலக்கியமாகத் தஞ்சைவாணனைப் பாட்டுடைத் தலைவனாகக்கொண்டு அவன் பெயரால் "தஞ்சைவாணன் கோவை" என்னும் பெயரில் 425 - கலித்துறையுடன் அரிய நூலொன்றியற்றி அவனைப் பெருமைப்படுத்தினர். இக்கோவையின் அருமை பெருமைகளும், ஆற்றொழுக்கான போக்கும், அமுத மயமான சொல்லும், அளக்க முடியாத பொருளும், அறிஞரெல்லாம் அறிந்து மகிழத் தக்கன. சுருங்கக்கூறின், தில்லையில் திருவாசகமருளிய மணிவாசகப் பிரான் திருவாய்மலர நடராசமூர்த்தி திருக்கரங்கொண்டு வரைந்தருளிய "திருச்சிற்றம்பலக் கோவைக்குப் பின்னிட்ட மற்றுள்ள கோவைகளொன்றும் இதற்கீடாகா. அக்கோவையில், "மீனவர்தம்

---

* இவன் இயற்பெயர் தெரியவில்லை. இவன் பாண்டியனுக்குச் சேனாதிபதியாகவும் இருந்தவன். 'இவன் வல்லத்தமர் வென்றவன்' என்றும், 'கன்னடர் மண்கொண்டவன்' என்றும் கோவையால் தெரிகின்றது. கி. பி. 1588-ல் பட்டந்தரித்த 'வீரபாண்டியனும்,' வல்லமெறிந்தவனென்று தென்காசிக் கல்வெட்டொன்றால் தெரிகிறது. இவ்விரண்டினுங் குறித்த வல்லப்போர் ஒன்றேயாயின் தஞ்சைவாணன் காலம் 16-வது நூற்றாண்டாகும்.

செங்கோல் முறைமையைச் செலுத்தியவாணன்" "தென்னன் றன்னைப் பணிந்து குற்றேவல் செய்யாது சமர்க்கெழுந்த மன்னைப் புறங்கண்டவாணன்" "வேளாண்மரபு விளக்கிய வாணன்" என்று வருவதால் அக்கோவைக்குரிய பாட்டுடைத் தலைவன் புகழ்தற்குரிய அம்சங்களில் சிறந்து "பொன்மலர் நாற்றமுடைத் தென்னும்" பெருமைக்கும் இலக்கானது சிலாகிக்கத் தக்க தின்றோ? அக்கோவையை அரங்கேற்றுகையில் அவ்வாணன் பாடலொன்றுக்கு ஒவ்வொரு தேங்காயளவு பொய்யாமொழியாருக்குப் பொன்னளித்தானெனப் "புலவர் புராணமும்" "பாண்டிமண்டலச்சதகமும்" கூறுகின்றன. அப்பாடல்கள் வருமாறு:—

"பொருவாதுயர் சுவைதோயகப் பொருட்கோவை சொலிடலு
மொருபாடலுக்கும் பொன்னெருதேங்காயளவொப்பப்
பெருகார்வ மொடுதவிப்பிற பொருளும் பலவெய்தா
னருகோர் துணையில்லானவை கொடுவீதியணைந்தான்"

(புலவர் புராணம்)

"ஒருகவிக் கோரொரு தேங்காய்ப்பொன் ஞற்செய் தருட்டிக்கல்வி
பெருகச்செய் நாவலர் வாழக் கொடுத்துப்ர தாபம்பெற்றோன்
திருமலி தஞ்சையிற் கோவைத் தமிழ்கொண்டு செல்வமிக
வருதரு வாகிய வாணனும் பாண்டியன் மண்டலமே"

என்பதாம். (பாண்டிமண்டலச் சதகம்)

புலவர், பாண்டியனை முதன்மையாகக்கொண்டு தலைந்தசங்கத்தை மறுமுறை கூட்டச் சங்கற்பித்துவந்த தமது கருத்தைப் பாண்டியர்க்கு மந்திரியும் படைத்தலைவனுமான தஞ்சைவாணனுக் கெடுத்துரைத்து அவனுல் அதற்குரிய வுதவியுடன் மதுரையடைந்து அரசனைக் காண வேண்டி அரண்மனை செல்ல, அரசன் ஆலவாயண்ணலை அடிபணியச் சென்றிருப்பதாக உணர்ந்து நேரே அக்கோயிலையடைந்தனர். அங்கே பாண்டியன் ஆலயத்தின் திருமுன்னர்த் தண்டாகாரமாய் விழுந்து கடவுளை வணங்குகின்ற நிலையைப்பார்த்து,

"வணங்காமுடிப் பாண்டியனே! உன்குலம் குழலான தண்டையுடைய தாமரைமலர்கள் வாய்குவியவும், முறுக்கவிழ்ந்து அல்லிமலர்கள் வாய்மலரவும், நிலவைக் கக்குகின்ற சந்திரகுலம் நீயே என்று சொல்லத் தக்க நின்குல முதல்வனுகிய அந்தச்சந்திரனே, செவ்வான மேனியனுகிய சிவபிரானுடைய தீக்கொழுந்துபோற் பிரகாசிக்கின்றசடையின் மேலே இருப்பதை நீ அறிந்திருந்தும், அக்கடவுளின் வீரக்கழலணிந்த பாதங்

களை வணங்குகின்றனையே” (இது தகுதியோ) என்னுங் கருத்தமையப் பாதிவசையும், நகையுமாக,

“குழற்கா லரவிந்தங் கூம்பக் குமுதம் பொதியவிழ்ப்ப
நிழற்கான் மதியமன் னோரின் றிருக்குல நீயவன்றன்
அழற்கா லொளிர்சடை மீதே யிருந்துமவ் வந்திவண்ணன்
கழற்கால் வணங்குதி யோவணங் காமுடிக் கைதவனே” (53)

(தமிழ் நாவலர் சரிதை.)

என்னும் பாடலைக் கூறினர். பொருளழகும், சொற்பொலிவும், ஓசையின்பமுங் கொண்ட விற்பனமிகுந்த கற்பனைக்கவியைக் காதுகுளிரக் கேட்டு வியந்த சிந்தையனாய், வனப்பமைந்த இத்தகைய செய்யுளைக் கூறிய புலவர் யாவரென அருகிலழைத்து விசாரித்தபோது, பொய்யாமொழிப்புலவர், தமது ஊர், பெயர் முதலியன வுரைத்து, மும்முறை கூடிக் கலைந்த தமிழ்ச்சங்கத்தை மீண்டும் புதிப்பித்துத் தமிழ்வளர்ச்சி செய்விக்க வேண்டுமென்னும் காரணமே தாம் இங்குவந்ததென்று தெரிவித்தனர். இது கேட்ட பாண்டியன், “தெய்வப்புலமை வாய்ந்த அச்சங்கத்தைக் கூட்டல் சிற்றறிவினராய நம்மால் ஆவதோ” என்று கர்ப்பூர விலையறியாத உப்பு வணிகனைப்போல், புலவர்தம் அருமை பெருமைகளை யுணராது கூற, புலவர் பாண்டியனைநோக்கி, அத்தகைய விஷயத்தில் என்னைப் பரிசோதித்துத் தக்கவன் தகாதவன் என்பதைத் தெரிந்து கொள்வீராக என்றனர். வழுதி, ஆயின் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்த சங்கத்தாரது திருவுருவங்கள் இதோ காணப்படுகின்றன. அவ்வுருவங்களை நோக்கி நீர் ஓர் பாடலிசைக்க அவ்வுருவங்கள் உம்மைத் தம்மோடொத்த புலவரென அங்கீகரித்துச் சிரக்கம்பஞ் செய்யுமேல் நீர் சங்கம் தாபித்துத் தமிழ்வளர்க்கத் தக்கவர் தாம் என்றனர். உடனே புலவர், விக்கிரக வடிவாய சங்கப்புலவரை நோக்கி, “இதழ்விரிந்த பூமாலையை அணிந்த நாற்பத்தொன்பதின்மரே! உங்களிலே யானொருவன் ஒப்பாவேனோ? அல்லது ஒப்பாகமாட்டேனோ? சந்திரகுலத்து வேந்தனாகிய இவ்வணங்காமுடிப் பாண்டியன் அறியச் சொல்லுங்கள். நீங்கள் சங்கத்திற் பாடுகின்ற முத்தமிழ்ப் பாடல்களுக்கு இப்பொழுது யான் பாடுகின்ற பசுந்தமிழ்ப் பாடல்களும் ஒத்திருக்குமோ? சொல்வீராக” என்னுங் கருத்தமைய,

உங்களிலே யானொருவ னொப்பேனோ வொவ்வேனோ
திங்க[illegible]னறியச் செப்புங்கள்—சங்கத்து

பாடுகின்ற முத்தமிழென் பன்னூலு மேற்குமோ
ஏடவிழ்தா ரேழெழுவீ ரின்று. 54 (தமிழ்நாவலர் சரிதை.)

என்றுபாட, அப்புலவர் சிலையுருவங்களெல்லாம் ஒரு சோச் சிரமசைத்தன. அரசன் பெரிதும் வியந்து மீண்டும் சோதிக்கவெண்ணி, புலவருடன் பொற்றாமரைக் கரையடைந்து, "இப்பொய்கையில் தான் முன்னமிருந்த சங்கப்பலகை மறைந்து கிடப்பதாகக் கூறுகின்றனர். அது மேலெழுந்து மிதக்குமாறு உமது கவித் திறத்தை விளக்குவீரேல் கருதிய கருமம் கைகூட்டுவல்" என்று சொல்ல, பொய்யாமொழியார் அங்ஙனமே ஆகுக வென்று,

"தற்காலம் உலகத்தை யாளும் அரசர்கள் முன் காலத்து வேந்தரைப்போல் தமிழை ஆதரிப்பவராக இருக்கவில்லை என்றாலும், முற்காலத்து வித்வான்களைப்போல் இக்காலத்தும் வித்வான்களிருக்கின்றார்கள் என்னுந் தன்மையால், சக்ரவர்த்தியாகிய வணங்காமுடிப் பாண்டியன் அறியும்படி மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் கௌரவங் கொள்வதற்குக் காரணமாயிருந்த பலகையே சற்றுமிதப்பாயாக" என்னுங் கருத்தப்பட,

பூவேந்தர் முன்போற் புரப்பா ரிலையன்றிப்
பாவேந்த ருண்டென்னும் பான்மைதான்—மாவேந்தன்
மாறனறிய மதுரா புரித்தமிழோர்
வீறணையே சற்றே மித. (55) (தமிழ் நாவலர் சரிதை.)

எனப் பாடுதலும், சங்கப்பலகை மிதந்தெழுந்து அரசன் காணுமாறு தரிசனந்தந்து மறைந்தது. இச்சம்பவங்களைக் கண்கூடாகக் கண்ட பாண்டியன் பெரிதும் வியந்து மகிழ்ந்து புலவர்பால் தானறியாது நடந்துகொண்ட குற்றங்களை மன்னிக்குமாறு வேண்டி, பொய்யாமொழியாரை நோக்கி! "நீர் ஓர் நல்ல புலவர்" என்று அவர் தெய்வப் புலமையைப் பலவாறு புகழ்ந்து கூறினன். அதுகேட்ட புலவர்,

"தக்ஷிணாமூர்த்தி வடிவங் கொண்ட சிவபிரான் மதுரை முசற்சங்கத்தில் இறையனார் என்னும் பெயருடன் விளங்கிய கடவுளும் புலவர், அறம் பொருளின்பம் என்னும் முப்பாலின் விதியுரைத்த திருவள்ளுவரும் புலவர், குமரவேள்பால் தமிழ்கேட்ட அகத்தியரும் புலவர், அவர்களோடு சமப்படுத்தி என்னையும் புலவனெனக் கூறியது இப்பூமி தாங்காது என்னுங் கருத்துத்தோன்ற,

"அறமுரைத் தானும் புலவன்முப் பாலின்
திறமுரைத் தானும் புலவன்—குறுமுனி

"தானும் புலவன் றாணி பொறுக்குமோ
யானும் புலவ னெனின்" (63) (தமிழ் நாவலர் சரிதை.)

என்று கூறினர்.

என்னே! இவர் பெருந்தன்மை! "மெலியது மேலெழச் செல்லச் செல்ல வலியதன்றோ தாழுந் துலைக்கு" என்பது இவரளவில் மெய்யென்பது பெறப்பட்டது.

(இன்னும் வரும்.)

சி. கு. நாராயணசாமி முதலியார்,
கோயமுத்தூர்.

கூடி மேம்படல்.

(வெண்டாமரை கூ, இதழ் கஉ, 274-ம் பக்கத்தொடர்ச்சி.)

மாந்தர்களின் நடத்தையை ஒழுங்கு படுத்துவதில் நூலாராய்ச்சியால் உண்டாகின்ற அறிவினும், கண்டுபாவித்தலா லுண்டாகின்ற அறிவு வலியதும், எளியதுமாம் என்பதைத் தம் அனுபவத்தால் நிதர்சனமாகக் கண்ட பெரியீர், இனத்தியல்பதாகு மறிவாகலானும், எறிபுனந்தீப்பட்டக்கால் அதனைச் சார்ந்துள்ள வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேதல்போல மனத்தால் மறுவிலாரையும் நல்லிணக்கமல்ல தல்லற்படுத்து மாகலினானும் இணக்கமறிந் திணங்கவேண்டுமென உபதேசித் திருக்கின்றனர்.

இருவர் அல்லது பலர் ஒன்றுகூடிப்பழகுங்கால் அவருள் யாவரது ஒழுக்கம் பிரபலமோ (மிக்க வலியுடையதோ) அவரது ஒழுக்கத்தினை மற்றையரும் கைக்கொண்டொழுகத் தலைப்படுதலை அனுபவத்தில் காண்டல் கவனிக்கின் அரிய தொன்றன்று.

திருஷ்டாந்தமாக மிக்க வலியுடைய கடவுட்பத்திமை பூண்டா ரொருவரை, அஃதின்றியவரும், தம் கூடாவொழுக்கத்தில் வலிகுன்றியவருமான வொருவர் கூடிப் பழகநேரின், அவ்விருவரும் சின்னாளில் பக்தி மார்க்க சீலர்களாய் விளங்குவதைக் கண்கூடாய்க் காணலாம்.

அங்ஙனமே மிகவலுத்த தீயொழுக்கமுடையா ரொருவரை, வலிகுன்றிய நல்லொழுக்கமுடையார் கூடிப் பழக நேர்ந்தால், இருவரும் கூடாவொழுக்க முடையராய்விடுதலைக் காண்டலும் சாத்தியமேயாம்.

தத்தம் இயற்கையில் பிடிவாதமுள்ள மாறுபட்ட ஒழுக்கமுடையார் இருவர் அல்லது பலர்கூடிப் பழகநேரின் அவருள் ஒருவரியற்கை ஒருவர்க்கு ருசியாமையால் அவரது கூட்டுறவு, "நீர்க்குட் பாசிபோல் வேர்கொள்ளாது" ஒழியும். ஆகலின்,

உலகில் பலதுறைகளிலும் இறங்கிச் செல்லவேண்டிய அவசியம் நேர்ந்துள்ள மாந்தர்கள் அவ்வத்துறைகளிலும் இன்றியமையாது கூடிப் பழகவேண்டிய ஜனங்களது இயற்கையையும் ஒழுக்கத்தையும் நன்கு கவனித்துணர்ந்து அவரது இயற்கையும் ஒழுக்கமும் தீதாய்க் காணப்படின்,

"கரும வரிசையாற் கல்லாதார் பின்னும்
பெருமை யுடையாருஞ் சேறல்—அருமரபின்
ஓத மறற்று மொலிகடற் றண்சேர்ப்ப
பேதைமை யன்ற தறிவு."

என்னும் பெரியார் அபிப்பிராயப்படி அன்னாருடன் காரியார்த்தம் கூடிப் பழகினும் அவரிடத்துத் தீயொழுக்கங் காணுந்தோறும் காணுந்தோறும் உள்ளத்தான் வெறுத்து அவர்க்கும் தமக்கும் பகைமை முதலிய தீதுறா வண்ணம் காத்துக்கொண்டு தொடுத்த கருமமுடிவில் கையகன்றொழுகுதலும்,

அவரது இயற்கை, ஒழுக்கம் நன்றாயின் அவற்றைப் பலகாலும் கண்டுகண்டு உவந்து அவற்றைக் கைக்கொண்டு ஒழுகப் பேருக்கக் கொள்ளலும் சீர்மையாம். ஆயினும்,

வஞ்சம் மலிந்த இக்காலத்துக் கூடியவரையில் மிகமுயன்று நல்லோர்களாலேயே நம் காரியங்களைச் சாதித்துக் கொள்ளப் பார்க்க வேண்டும். ஏனெனின், தீயோர் கூட்டம் எத்தனை எளியதோ அத்தனையினும் நல்லோர் கூட்டம் அரியதாகலின்.

"சிறியோர் கூட்ட மௌிதரிது தெளிந்தோர் கூட்டம்" என்றும்,

"அறக்குறைவை நிறைவாக்குஞ் சம்பத் தாக்கு
மாபத்தைச் சுபமாக்கு மசுபந்தன்னைச்
சிறக்குமுயர்ந் தவர்கூட்ட மென்னுங் கங்கைச்
சீதநீ ராடினர்க்குச் செந்தீவேள்வி
யிறக்கரிய தவந்தானந் தீர்த்தம் வேண்டா
விடர்பந்த மறுத்தெவர்க்கு மினியோ ராகிப்
பிறப்பெனும்வே லைப்புணையா முணர்வு சான்ற
பெரியோரை யெவ்வகையும் பேணல் வேண்டும்."

என்றும்,

பெருநூலாகிய ஞானவாசிஷ்ட உபதேசத்தை யீண்டுக் கவனித்தல் வேண்டும்.

இவ்வுலக வின்பத்திற்கே யன்றி மறுமைக்கும் சாதனமாமென்பது தோன்ற, "முனிவரு மன்னரு முன்னுவ பொன்னான் முடியும்" எனவும், "நடுவணதெய்த விருதலையுமெய்தும்" எனவும், "இடைநிலையாம் பொருளுண்டெனின் முதனிலை யெய்தறமும், கடைநிலையாஞ் செல்வமுமேவும்" எனவும் பெரியாரால் விதந்து கூறப்பட்ட செல்வப் பொருளைத் தீவினைவிட் டீட்டவேண்டிய கடப்பாடுடையாராகிய மாந்தர்கள், அப்பொருளை யீட்டலில் சோம்பலுடையாராய் வீண்வம்பு பேசித் திரிபவரையும், அப்பொருளை வீணிலும் தீநெறியிலும் அழித்தலில் பேருக்கத்தை உண்டாக்கும் இடம்பாசாரமுடையாரையும் ஒருபோதும் அணுகுதற்கு மனம் ஒருப்படா திருக்கும்படி முற்காத்துக்கொள்ளல் எல்லாவற்றிலும் முக்கியமாகும்.

இஃதே இங்ஙனமாயின், இல்லார்க் கீயக் குறையாது மிகுவதாய் அரசர், கள்வர் முதலியோரால் கவரற்கேலாததாய், இம்மை மறுமை வீடென்னும் மும்மையும் பயப்பிப்பதாய், பகைவரும் கொண்டாடற்குரிய சுசீலத்திற் கேதுவாய், சென்ற சென்ற விடங்டோறும் சிறப்பைத் தருவதாய் விளங்கும் கல்விப்பொருளை யீட்டலில் சோம்பி யிருப்பாரது கூட்டுறவு ஒதுக்கத்தக்க தென்பதைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ!

கல்விப்பொருளை யீட்டுவாருள்ளும் சிருங்காராதி ரசபூரித காவியங்களில் மாத்திரம் அபிருசி யுடைமையால் அதிற் சன்முகராய் உண்மைப்பொருளைத் தெளிவிக்கும் ஞான நூற்களைக் கற்பதில் பராமுகராய் இருப்பாரும் உளராகலின் அவருடன் கூடிப் பழகவேண்டிய சந்தர்ப்பங்களிலும் மிகு ஜாக்கிரதையாய்த் தற்காத்துக் கொள்ளல் மிக அவசியம். அதாவது, அவர்க்கு உவப்பைச் செய்வதாகிய காவியங்களில் மிகு நுட்பமாய் அமைந்துள்ள உண்மை நூற்பொருளைமாத்திரம் கவர்ந்துகொண்டு பிறவற்றை அவர்பொருட்டுப் பேச நேர்ப்படினும் தம் முள்ளத்தை உண்மை நிலையினின்றும் பிறழா திருக்கப் பார்த்துக்கொள்ளல் வேண்டும்.

இங்ஙனம் கூறிய எல்லாவிதத்தாலும் உலக ஜனங்களுடன் கூடி ஒழுகுவதில் யாதொருவன் விழிப்புடையானோ அவனே தன்னியனாம்.

(வரும்.)

ஓர் இந்து.

தேவாரப் பதிகங்கள் ஆராய்ச்சி.

மற்றேரு கீழ் வேளூர்ப் பதிகம்.

முறிப்பான பேசி மலையெடுத் தான்றானு
முதுகிற முன்கைந் நரம்பை யெடுத்துப் பாடப்
பறிப்பான் கைச்சிற் றறிவா ணீட்டினானைப்
பாவியே னெஞ்சகத்தே பாதப் போது
பொறித்தானைப் புரமூன்று மெரிசெய்தானைப்
பொய்யர்களைப் பொய்செய்து போதுபோக்கிக்
கிறிப்பானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடிலாரே.

(திருக் கீழ்வேளூர், திருத்தாண்டகம்.)

(இ-ள்.) பேசத் தகாத வார்த்தைகளைப்பேசிக் கைலையங்கிரியை யெடுத்த இராவணேசுரனுடைய முதுகு ஒடிய அதன் பொருட்டுத் தன் கையிலுள்ள நரம்புகளை எடுத்து வீணைத் தந்திகளாக்கிச் சாமகானத்தாற் பாடப் பெற்றவனும, தன் கையிலுள்ள சிற்றறிவாளை நீட்டிக் கழுத்தை யறுக்க முயலும்போது அதனைப் பிடுங்கியெறிந்து ஆண்டுகொண்டவனுமாகிய சிவபெருமானுடைய பாதமாகிய தாமரை மலரைப் பாவமே நிறைந்து உருவான அடியேனது மனதினிடத்து நிலைத்து நிற்கச் செய்தவனை, முப்புரங்களையுமெரியுமபடி செய்தவனை, பொய் பேசுபவர்களைப் பொய்யாகவே போகும்படி செய்து காலத்தைக் கடத்துவானை, கீழ்வேளூர் என்னும க்ஷேத்திரத்திலே குடிகொண்ட பெருமானான கேடிலிநாதரைத் தரிசிப்பவர்கள் கேட்டை ஒருகாலும் அடையார். எ-று.

தன் கையிலுள்ள சிற்றறிவாளைக் கழுத்தையறுக்க நீட்டிய காலத்து நீக்கிய கதையாவது:

கீழ்வேளூர் என்னும் க்ஷேத்திரத்திலே ஒரு ஆட்டு வாணிபஞ் செய்வானொருவ னிருந்தான். அவன் தினந்தோறும் ஆடுகளை வாங்கி விற்று அதன் வழியாக ஜீவனம் செய்துவருவானாயினன். இப்படி இருக்குநாளில் ஓர் நாள் ஒரு ஆடு காணாமற்போயிற்று. இதனைத் தேடிப் போகுங் காலத்து அவ்விடம் தவம் செய்துகொண்டிருந்த பெரியாரொருவரை வினவலும், அவர் இவனது வினாவை அறியாராயினும், அச்சமயம் பிராணாயாமம் செய்துவிட்டுக் காதடிக்குக் கையைக் கொண்டுபோம் வழக்கபபடி அவர் கொண்டுபோனார். அதனைக் குறித்து இவ்வாட்டு வினை

ஞன் தனக்குச் சமிக்ஞை செய்ததாகக் கொண்டு அத் திசையை நோக்கிச் செல்ல, தான் தேடிவந்த பொருளைக் கண்டு அதனைக் கொன்று ஊதியமடைந்தான். இக் குற்றத்திற்காக, தவத்திலிருந்த பெரியார் தமது கால முடிவினால் காலனால் ஆடாகப் பிறக்கும்படி ஆக்ஞாபிக்கப்பட்டவராயினும், தமது தபோ வலிமையால் பூர்வஞானம் பெறும் பாக்கியத்தையும் பெற்றார். காலகதியால் இவ் வாட்டு வாணிபனிடமே இவரும் வந்து மாயப்போகுந் தறுவாயில் பொள்ளெனச் சிரித்தலும், இவ்வாட்டு வினைஞனுக்கு நற்காலம் கிட்டினமையின், ஆட்டினை ஏன் சிரிக்கின்றாய் என்று வினவ, அது என்னை இப்பொழுது நீ கொலைபுரிந்து எனது மாமிசத்தை விற்க இயைந்ததுபோல் நான் விடையிறுக்க பிறகும் செய்வதாக வாக்குறுதி கொடுத்தால் சொல்வேனென்று சொல்லி உறுதி பெற்று, தனது பூர்வ ஜன்ம தபோ மகிமையால் நடந்த வரலாறுகளைக் கூறிற்று. இதனைக் கேட்ட இக் கொலைஞன் தனது நற் கரும வசத்தால் அதற்குப் பரிகாரம் கேட்க, கையிற் பலியேற்றுண்பதே நீ செய்து வந்த பாவங்களைப் போக்கவல்லதென்று கூறலும், தான் முன்னம் கொடுத்த வாக்கு மாறாமற் கொன்றுவிட்டு, தானும் துறவறத்தை யடைந்து அவ்வூரிலேயே தனது பொருளெல்லாவற்றையும் நல்வழியிற் செலவழித்துக் கையிற் பலியேற்றுண்டுவந்தான்.

இஃது இங்ஙனமாக, காமுகனான அந்தணனொருவன் தனது காமக் கிழத்திக்குக் கொடுக்கப் பொருளில்லாமைக்கு மருண்டு இப்பெரியார் தங்கியிருந்த அம்பலத்திற்றங்கிப் பிரலாபிப்பதையறிந்த இவர் அவன்பாற் கருணையுற்று, இவன் எதன்பொருட்டுக் கவலுறுகின்றான் என்று வினவி, காரணத்தையறிந்த மாத்திரத்து, தான் அவ் வேசைக்குக் கூலியாளாயமர்ந்து தொண்டுபுரிவதாகவும் அதற்குண்டாகும் பொருள்மாட்டு இவர் ஆயுளை நீட்டிக்கும் காமத் தீயை மணக்கலாமென்றுங் கருணையாற் கூற, அதற்கிசைந்து அவ் வஞ்சகன் இப் பெரியாரைப் பரத்தையிடத்தி லொப்பித்துத் தான் கட்டழல் காமத் தீயில் மூழ்குவானானான்.

இங்ஙனமிருக்கையில் அப் பரத்தையினது சேடியர் அவரிடம் வேலை வாங்கிக்கொண்டு உணவளித்து வருகையில் ஓர் நாள் அவர் கையில் வாங்கியுண்டபின் கைகழுவிய நீரானது அப் பரத்தையின் தாயின்மேல் விழ, அந் நீர்த்திவலை வீழ்ந்தமாத்திரத்தில் அவள் யாவருங்கண்டு மையல் கொள்ளும்படியான மங்கையானாள். இவ் வதிசயத்தைக் கண்ட அவள் இவர் பெரியரென்பது திண்ணமென மதித்து நமஸ்கரித்ததும், ஆட்டு வாணிபஞ் செய்து திருந்திப் பெரியாரான இவர் தாம் அடிமையாக

விருப்பதால் தம்மையாள்பவர் பணியத் தகாதெனஎவ்வளவு சொல்லியும் கேளாததை கண்டு தம் உயிரை மாய்க்க அவ்விடமிருந்து ஒரு கூனிரும்பைக்கொண்டு தன் மிடற்றினை யறுக்கப் போகுங்கால் கேடிலி நாதரெனப் பெயர்பெற்ற அக்ஷயலிங்கேசன் றோன்றி அவ்வரிவாளைக் கையினின்றும் பற்றிக் காட்சி தந்தானென்ப.

இதனை அந்தகக் கவிவீரராகவமுதலியார் தமது உலாவின் கண்ணே வெகு அழகாகப் பாடியுள்ளார், அது வருமாறு:-

கைம்மே லருந்திக் கழுவுநீ ராங்கவ டாய்
மெய்ம்மேல் விழப்பிழநோய் மீண்டதன்னை – அம்மாது
பார்த்துப் பணியப் பணிதவிர்த்தா னுய்யேனென்
றோர்த்துத் தனதுமிட றுங்கறுப்பச் – சேர்த்திருகை
மாகையாற் பற்றி வலிதுதடுத் தாட்கொண்ட
தாகையா லாளுங்கோ வாயினேன்.

இலக்கணவிளக்கப் பரம்பரை,
சோமசுந்தர தேசிகர்,
திருவாரூர்.

பாவனைப்பயன்.

இப்பாய வுலகின் எவர்களாயிருப்பினும் உண்மையில் பாவனை செய்யுமிடத்து அப்பாவனையின் பயனை அடைதல் கூடுமென்பது அறிவுடையோரது அநுபவ சித்தமேயாம். இதற்குச் சான்றாக, திருச்செந்தூர் ஸ்ரீ வல்லிதேவ ஸேனாஸமேத ஸ்ரீ சுப்பிரமணிய மூர்த்தியின் திருவருளைப் பெற்ற நமது குமாரகுருபர சுவாமிகள் அருளிய ஆசிரியப்பாவாலுந் தெற்றென விளங்கும்.

ஆசிரியப்பா.

"செய்தவ் வேட மெய்யிற் றாங்கிக்
கைதவ வொழுக்க முள்வைத்துப் பொதிந்தும்
வடதிசைக் குன்றம் வாய்பிளந் தன்ன
கடவுண் மன்றிற் றிருநடங் கும்பிட்
டுய்வது கிடைத்தனன் யானே யுய்தற்
கொருபெருந் தவமு முஞற்றில னுஞற்று
தெளிதினிற் பெற்ற தென்னெனக் கிளப்பிற்
கூடா வொழுக்கம் பூண்டும் வேடங்
கொண்டதற் கேற்பநின் றிண்டொடு ...ழலிற்

பூண்டவவ் வேடங் காண்டொறுங் காண்டொறும்
நின்னினை யென்னிடத் துன்னி யுன்னிப்
பன்னா ணோக்கின ராகலி னன்னவர்
பாவனை முற்றியப் பாவகப் பயனின்யான்
மேவரப் பெற்றனன் போலு மாகலி
னெவ்விடத் தவருனை யெண்ணினர் நீயுமற்
றவ்விடத் துளையென வையம்வே றின்றே

அதனால்

இருபெருஞ் சுடரு மொருபெரும் புருடனு
மைவகைப் பூதமோ டெண்வகை யுறுப்பின்
மாபெருங் காயந் தாங்கி யோய்வின்
றருண்மூந் துறுத்த வைந்தொழி னடிக்கும்
பரமா னந்தக் கூத்த கருணையொடு
நிலையில் பொருளு நிலையியற் பொருளு
முலையா மரபி னுளங்கொளப் பகுத்திப்
புல்லறி வகற்றி நல்லறிவு கொளீஇ
யெம்ம னோரையு மிடித்தவரை நிறுத்திச்
செம்மைசெய் தருளத் திருவுருக் கொண்ட
நற்றவத் தொண்டர் கூட்டம்
பெற்றவர்க் குண்டோ பெறத்தகா தனவே.''

நலனுற விபூதி உருத்திராக்கமுதலிய சிவசின்னங்களைச் சரீரத்தில் தாங்கிக்கொண்டு அதற்குமாறாக உள்த்தில் தீய வொழுக்கமாகிய வஞ்சனையை எட்டுணையேனும் இடமின்றி நிறைத்து வைத்திருப்பினும், தரித்துக்கொண்ட வேடத்திற் கியைய அந்த இனத்தோடு பன்னாள் பழகிவருதலானும் தாம் மேற்கொண்டுள்ள அவ்வேடத்தைப் பிறர் சதா பார்க்குந்தோறும் சிவரூபமாக நினைத்து நினைத்துப் பன்முறை நோக்குகின்றமையானும் அவர்களது பாவனை முதிர்ந்து அப்பாவனையின் பயன் கைவுந்திடப் பெற்றேன் ஆதலின் எவ்வெவ்விடத்தில் அவர்கள் உண்மையில் பாவித்து எண்ணுகின்றார்களோ அவ்வவ்விடத்தில் பிரதிபலித்துக் கருணை பொழியுமென்பதில் சிறிதும் ஐயமின்று. இதனால் எம்போன்றவர்களையும் தீநெறிக்கட் செல்லாதொழித்து நன்னெறிக்கட் செலுத்திச் செம்மை செய்தருளுதற்குத் திருவுருவத்தைத் தாங்கிய (இங்கு வாளா உருவமென்னாது திரு என்று முன்னே புணர்த்திய விசேடம் சிவவேடமாகிய சிறப்பைச் சால உணர்த்தி நின்றது.) இத்தன்மைத் தாகிய அவ்

வடியார் இனத்தைச் சார்ந்த பாக்கிய முடையோர்க்குப் பெறுந் தகாத பேறு வேறில்லை யென்பது ஒருதலையாகக் கோடற்பாலதேயாம் என்பது தோன்ற நனிநிகழ்கின்றன.

இம்மட்டோ! இவ்விஷய சம்பந்தமான சரித்திரங்கள் பல. அவற்றுள் இரண்டொரு சரித்திரத்தை ஈண்டெடுத்துக் காட்டாமல் விட மனந்துணியவில்லை.

பண்டைக்காலத்தில் வேட்டையாடுதற்கு வனத்திற்சென்ற பாண்டியராசன் இளைப்புற்றுத் தங்கித் தனது நித்திய கருமங்களை முடித்துக்கொண்டபின்னர் வழக்கம்போல் சிவதரிசனஞ் செய்ய அவ்வனத்தில் சிவலிங்கங் காணாமையால் சிவலிங்க மிருக்குமிடத்தைப்பார்த்து வாருங்களென்று மந்திரி முதலானவர்கட்கு ஆஞ்ஞைசெய்தான். உடனே மந்திரி முதலானவர்கள் அவ்வனத்தில் எங்கும் தேடிப்பார்த்தும் காணாமையால் பின்னர், குதிரையின் வாயிலே காணமிட்டுக் கட்டப்படும் தோற்பையினுள்ளே மணலைப்புகுத்திக் கவிழ்த்து அதன்மேல் ஆடை ஆபரணம் சந்தனம் மாலை அறுகு அட்சதை முதலியவை யெல்லாந் தரித்து அரசனிடத்திற் சென்று சிவலிங்க தரிசனஞ்செய்ய வருகவென்ற விண்ணப்பஞ்செய்ய, சிவபத்தியிற்சிறந்த பாண்டியராசன் அந்த இடத்திற்சென்று அங்கு நிகழ்ந்த உண்மையை உணராது சிவலிங்கப்பெருமான் இவரே என்னும் உண்மை ஞானக்கருத்தோடு பாவித்து வழிபட்டுத் தன்னகரடைந்தான். பின்னர் வழக்கம்போல் வேலைக்காரர் தோற்பையைப்போயெடுக்க முயன்றபோது அது சிவலிங்கமாய் ஊடுருவி நின்றது. இது பற்றியே நமது ஸ்ரீ மணிவாசகப்பெருமான்,

"மொக்கணி யருளிய முழுத்தழன்மேனி
சொக்கராகக்காட்டிய தொன்மையும்"

என்று அருளிச்செய்தார்கள்.

(மொக்கணி) என்பது தோற்பை.

இதுவன்றி நாகைக்குத் தெற்கே (௧௦) மைல் தூரமுள்ள திருக்கன்றாப்பூர் என்னுந் தலத்தில் கன்றுகட்டுந் தறியைச் சிவலிங்க வடிவமாகப் பாவித்து வழிப்பட்ட ஒரு பிராமணப் பெண்ணின் பொருட்டு அத்தறியே சிவலிங்கமாயிற்றென்று அத்தலபுராணம் கூறுகின்றது.

அநுக்கிரகிக்கும் கருணை மேலீட்டால் கன்று கட்டுந் தறியைச் சிவபெருமான் வாசஸ்தானமாகக் கொண்டுளாரென்பதும் பிறவும் நமது வாகீசப்பெருமான் அருளிய அத்தலத்தின் தேவாரத்திலுல் நனி விளங்கும்.

‘எவரேனுந் தாமாக விலாடத்திட்ட திருநீறுஞ் சாதனமுங் கண்டாலுள்கி-யுவராதே யவரவரைக் கண்டபோ துகந்தடிமைத் திற நினைந்தங் குவந்துநோக்கி-யிவர்தேவ ரவர்தேவ ரென்று சொல்லி யிரண் டாட்டா தொழிந்தீசன் திறமேபேணிக்-கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே.’

இன்னும் இதுபோன்ற இவ்விஷய சம்பந்தமான பலசரித்திரங்க ளிருப்பினும் நனிவிரியு மென்றெண்ணி அதனை விடுத்தாம்.

S. நடேசதேசிகர்,
திருநள்ளாறு.

கொல்லாமை.

(வெண்டாமரை ௬, இதழ் ௧, 208-ம் பக்கத்தொடர்ச்சி).

இனி வாம மதத்தினரின் ஆட்சேபங்களுக்குச் சமாதானம் வருமாறு:- சராசரங்களெல்லாம் சீவனென்றபொழுது, அவற்றுள் அசரமாகிய மரமுதலிய சீவன்களை மாமிச பட்சணமில்லாத பெரியோர்கள் அருந்துகின்றார்களே, அவற்றினால் அவர்கட்குத் தோஷமில்லாதது என்னையெனின், சரக்கொலையினபாவம்போல அசரக்கொலையிற் பாவமிகுதி யில்லை. கிஞ்சித்துப் பாவமே யாம். சீவன்க ளெல்லாஞ் சமமாயிருக்க அசர சீவக் கொலையிற் பாவம் குறைந்திருப்பானேனெனின், அவ் வசரசீவிகள் எழுவகைத் தோற்றத்துள்ளுந் தாழ்ந்த பருவத்தினையுடையவாதலினாற் பாவங் கொஞ்சமே யாம். அப்படிப் பருவத்தினது உயர்ச்சி தாழ்ச்சியாற் பாவமேறிக் குறைந்திருப்பதற்குத் திருட்டாந்தம் என்னையெனின், உலகின்கட் பஞ்சகௌவியங்களை வழங்கும் நிர்மல தேகியாகிய பசுவினது மாமிசத்தைப் புசிப்போன் எவ்வளவுஉயர் குலத்தோனாயினும் அவனைத் தாழ்ந்த குலமாகவும், முழுமல தேகியாகிய பன்றி மாமிசத்தைப் புசிப்பவன் மிகத்தாழ்ந்தகுலச் சண்டாளனாயினும் இவனை அவனினும் உயர்குலமாகவும் சொல்லா நிற்பர். ஏனெனின், பன்றிக் கொலையாற் பாவங் குறைதலின். பன்றியிற் பாவம் குறைய வேண்டியதென்னையெனின், மிருக வர்க்கத்துள் அது தாழ்ந்த பருவத்தினையுடையதாகையா லென்க. பசுவும் பன்றியும் மிருகசாதி பேதமாயிருக்கப் பருவபேதம் வருவானேனெனின், வேதாகம விதிகளை அறிந்த பிராமணரும் அவைகளையறியாத புலையரும் மனிதசாதியென்று சொல்லப்படுதல்போல முற்கூறிய பசுவும், பன்றியும் மிருக வர்க்கமென்று

சொல்லப்படினும், பாவமானது மனிதக்கொலைகளுள்ளே பிரமக்கொலையிலேறியும் நீசக்கொலையிற் குறைந்தும் இருத்தல்போல மிருகங்களுள்ளும் பாவமானது ஏற்றக் குறைவாயிருத்தலா மென்க. இத்தன்மைபோலச் சரக்கொலையிலே பாவம் ஏறியும் அசரக் கொலையிலே குறைந்தும் இருக்குமென வுய்த்துணர்ந்து கொள்க. அன்றியும், அசரவடிவங்களானவை சர வடிவங்களைப்போலக் குறைத்த கிளைகளை மற்றோரிடத்தில் வைக்க அதுவுந் தளிர்த்தலானும், அக் கொலையால் வரும் பாவஞ் சரக்கொலையிற் போலாது அசரக்கொலையிற் குறையுமென் றறிக. அசரக் கொலையாற் பாவமற்பமாயினும் நாடோறும் சிறிது சிறிதாக வந்து கூடுதலாற் சரீராந்தத்தில் அநேகமாகச் சுமப்பதுமன்றி, உழுதல் கூலிவேலை செய்தல் வாணிகஞ் செய்தல் சினமிருத்தல் அசத்தியங்கூறல் வீடுபெருக்குதல் மெழுகுதல் நெருப்பு மூட்டல் தண்ணீர் கவர்தல் நெற்குத்துதல் என்பனவாகிய பத்துவிதத்தான் வரும்பாவமும் அனந்தமாதலின் அவற்றின் பலனை அனுபவியாது நீங்குமாறெங்ஙனமெனின், அறிவுடையோனவன் அசரபதார்த்தங்களை வேதாகமங்களிலே இல்லறத்திற்கோதிய தருமநெறி வழுவாமல் தேவர் அதிதி அக்கினி ஆசாரியர் என்னும் நால்வகையோர்க்கும் முன்னூட்டிப் பின்னுண்டானுகில் கொலையால் வரும் பாவமும் மற்றும் முற்கூறிய பத்துவிதத்தான் வரும்பாவமும் அவ்வக் காலத்தில் நசித்துவிடுமாதலின், அவன் சரீராந்தத்தில் பாவமே சுமக்க வேண்டுவ தில்லை. இம்முறைமையைப் போல் மாமிசத்தை முற்கூறிய நால்வகையோர்களுக்கும் முன்னூட்டிப் பின்னுண்ணக் கூடாதோவெனின், அவர்களுக்கு மாமிசத்தை நிவேதிக்க வேதாகம விதியின்மையின் அது கூடாதென்க. இங்ஙனமாகலிற் சரக்கொலைப் பாவம் நீங்காது. அதென்போலவெனின், ஒருவன் ஒரு குற்றஞ்செய்து அக் குற்றத்தை நீக்கிக்கொள்ள அரசனிடத்திற்குச் செல்லும்பொழுது, அவ்வரசனுக்குப் பிரீதியில்லாத காரியத்தைச் செய்துகொண்டு போவானேயாகில் முன்பு அவன் செய்தகுற்றமுந்தீராது. பின்பு செய்தகுற்றத்திற்கும் அவ்வரசனால் தண்டிக்கப்படுவான். அதுபோல ஈசுராதி தேவதைகட்குப் பிரீதியில்லாத மாமிசத்தை நிவேதித்தால், சரக்கொலையுந்தீராது. அநார்ப்பிதமாதலின் அதிபாதகமும் வரும். முன்பு கண்ணப்பர் மாமிசம் நிவேதித்திருத்தலின் ஈசுரப்பிரீதி யன்றென்பது கூடாதெனின், அவர் பூர்வசென்மத்திற் செய்த தபோபலத்தினாலே ஒருகாலத்திற்காளத்தியீசனைக் கண்டமாத்திரத்திலே, பேயினாற் பிடியுண்ட ஒருவனுடைய சரித்திரம் பேயின் சரித்திரமாகி நின்றது போலக் கண்ணப்பருடையசரித்திரமெல்லாங் காளத்தியீசருடைய சரித்திரமாக நிற்றலால், அவர்க்கு மோக்ஷந்

கைக்கூடிற்று. அவர் ஒரு ஆசாரியரை அடைந்து, இது பாவம் இது புண்ணியம் இது செய்யலாம் இது செய்யலாகாது என்று ஒருகாலும் கேட்டறிந்தவரல்லர். அவர் தாம் பழகியிருந்த பழக்கத்தைப் பின்னும் பத்திமிகுதியினுற் செய்தனராகலின், அவரைப்போல ஈசானுக்கு மற்றொருவன் வாய்நீரால் அபிஷேகஞ் செய்து மாமிசத்தை நிவேதித்துச் செருப்புக்காலால் உதைக்க நினைப்பானுகில், அவன்போய் விழும் நரகத்திலே பின்வீழ்வார் ஒருவருமிலர். ஆதலின் கண்ணப்பருடைய பக்தியை விதியென்று பிரமாணித்தல் கூடாது. உலகத்தின்கண் ஒரொருவர் பத்திமிகுதியாற் செய்த சரித்திரங்களை விதியென்று ஒருகாலும் பிரமாணித்தல் கூடாது. அஃதேனெனில், சண்டேசுர நாயனுர் பிதாவைக்கொன்று முத்தியடைந்தாரென்றும், சிறுத்தொண்டநாயனுர் பிள்ளையை அறுத்து முத்தியடைந்தாரென்றும் சொல்லப்பட்டிருக்கின்றதேயொழியஅதுவே வழியாகப் பிறரும் பிதாவைக் கொன்றும் பிள்ளையை யறுத்தும் முத்தியடைந்ததாகச் சொல்லப்படவில்லை. அப்படிப்போல இப்பொழுதும் ஒருவனுக்கு மிகுந்த பத்தி வந்ததாயினும், விசேடித்த ஒருகருமத்தைச் செய்வதொழிந்து முன் ஒருவர் செய்த பத்திமைப்படி தானுஞ் செய்யவேண்டுமென்பதில்லை. பின்ஒருவன் விதிமார்க்கத்தை யொழித்து ஒருகாலும் முன்னோர் பத்திமானின் சரித்திரத்தைப் பிரமாணிக்கவொண்ணுது. அஃதெப்படியென்னில், ஓரேரியின் கண்ணே மிகுந்த வெள்ளமானது ஒருகாலையில் நடுவே முறித்துக்கொண்டு சென்றதாயின், அதுவே ஏரிக்குக் கலிங்கென்று விடுவாரில்லை. ஏரியின் கடையிற் கலிங்கு விடுவதே உண்மை. அதுபோலக் கண்ணப்பநாயனுர் முதலாயினோர் செய்த உலகாதீதமாய சிவானுக்கிரக வலியினையுடைய மிகுந்த பத்தியை நாமும் விதியென்று கொண்டு ஈசுரனுக்கு மாமிசம் நிவேதிப்பதென்பது மிகுந்த குற்றமா மென்று அறியவேண்டும். இதற்குப் பிரமாணம்:-

"வெள்ளமிகுத் தேரிநடு வுடைத்தோடி னதுகலிங்காய் விடுகிலாரப்
பள்ளமடைத் திருப்புறத்துங் கடைவிடுவ ருலகோரப் பரிசுபோல
வுள்ளமிகுத் தறிவெழலாற் பத்திமிகுத் தமையானென் றொருவர்செய்யிற்
றௌ்ளுணர்வோ ரதனைவிதி யென்றுபின்னும் புரிகுவரோ தெளிவிலோ
[யே."

என்பதனுற் காண்க.

(தொடரும்)

ந. கண்ணுச்சாமிப்பிள்ளை,
சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை.

அறப்பூங்கொத்து.

ஒரு பண்டாரப் பாட்டு.

ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றுதான் என்ற உண்மையை எவ்வளவுதான் பன்னிப் பன்னிக் கூறினாலும் மிகையாகாது. உபநிடத நூற்கள் இவ் வுண்மையைத் திறப்பட எடுத்தெடுத்தோதும். உண்மையான அழிவற்ற ஒருவன் இவ்வுலகங்களின் யாவற்றின் உள்ளும் புறம்பாகவும் நின்று ஆட்டுவிக்கிறான். ஒவ்வொருவ னகத்திலும் விளங்கும் இப்பொருளை உய்த்துணரவல்லான் நித்திய சுகத்தை அடைகிறான் என்னும் கடோபநிடதம். நதிகள் யாவும் தம் பிறப்பிடம் பெயர் முதலியன வொழித்துக் கடலைச் சென்றடைகின்ற தன்மைபோல் ஆத்துமாக்கள் யாவும் பிரம்மத்தில் கலந்து உருவழிந்து விடுகின்றன என்னும் மற்றொரு நூல். பிரம்மத்தின் இலக்கணத்தைக் கூறும் பிறிதொரு நூலும் அதை எதனின்றும் எல்லா உயிர்களும் பிறக்கின்றனவோ, பிறந்தவை எதனால் உயிர் வாழ்கின்றனவோ, இறந்து பட்டபோதும் எதைச் சென்றடைகின்றனவோ அது பிரம்மம் என அதை விவகரிக்கும். "அது நீ" "தத் த்வம் அஸி" என்னும் மறை. அத்வைத சித்தாந்தமும் அதுவே.

இந்த உண்மையைக் கவிகள் பலரும் பலவிதமாகப் பாடியிருக்கின்றனர். என்றாலும், முன்னர் நான் மொழிபெயர்த்து உருசி காட்டிய "காரிருட் காவலன்" என்னும் நாடகத்தில் ரவீந்திர நாத தாகூர் அவர்கள் வரைந்துள்ள பெரிய கிழவனார் பாட்டு இதனைச செவ்விதின் உணர்த்துவதாக இருக்கின்றமையின் அதை இங்கு விடுத்து என் முன்னுரையை முடித்துக் கொள்கிறேன்.

(பாட்டு.)

இந் நாட்டில்,
நாங்க ளியாவரு மரசர்களேயே—யின்றேல்
எங்ஙன மவரைக் காணுத லியலும்?
நாங்க ளியாவரு மரசர்க ளேயே!

எங்கள் மனப்படி நடப்போம் - எனினும்
அவர்தம் மனப்படி யாவுமே யமையும்
தங்கக் கயிறுகள் கொண்டு - தனியிற்
பிடிபட்ட மாந்தர் யாமல்லே மையே!
எங்கள் மனப்படி நடப்போம் - இன்றேல்

எங்ஙன மவரைக் காணுதலியலும் ?
நாங்கள் யாவரு மரசர்க ளேயே!

எம்மைப் பணிவா ரெம்மிறைவர் - எனினுமப்
பணிவினு லெம்மைப் பணிவிப்பா ரையே!
பொய்ம்மை யிருத்ததோர் பந்தம் - மெய்யாப்
பாரினி லெம்மைப் பிணித்து நில்லாதே
மெய்ம்மையே யெகணையும் வெல்லும் - இன்றேல்
எங்ஙன மவரைக் காணுத லியலும்?
நாம்கள் யாவரு மரசர்க ளேயே!

நல்ல வீதிகள் நாமமைப்போம் - அது
நாதர்தம் வெளியினை நாடியே செல்லும்
பல்லாயிரங் கதிர்ப் பகலோன் - இரவிற்
பொய்ப்பினும் பாதையிற் றிறிதேனுந் தவிரோம்
நல்ல வீதியின் நடப்போம் - இன்றேல்
எங்ஙன மவரைக் காணுத லியலும்?
நாங்க ளியாவரு மரசர்க ளேயே!

இங்கு ஒருவார்த்தை நான் விளக்கமாக எழுதவேண்டி வருகிறது. நாங்கள் யாவரும் அரசர்கள் என்றார் கவி. அதாவது நாம் யாவரும் சச்சிதானந்த சொரூபிகள் என்பதாம். இது ஏன் என்பதற்குக் காரணங் கூறுவார், இது இங்ஙனம் இன்றேல் ஏற்படக்கூடிய குற்றத்தை எடுத்துக்காட்டினார். இன்றேல் எங்ஙனம் அவரைக் காணுதல் இயலும்? அதாவது நாமும் அப் பரமாத்மாவைப்போல் சச்சிதானந்த உருவினர். இல்லாவிடின் எங்ஙனம் அவர் திருவடி நீழலிற் கலந்து சாயுஜ்யம் பெறும் பேற்றை எய்துதல் கூடும்?

ரா. வாசுதேவ சர்மா,
புதுவை.

கடிதக்காரர் அபிப்பிராயத்துக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

சத்வித்யா சன்மார்க்க சங்கம்.

கோயமுத்தூரைச்சார்ந்த பேரூர் சாந்தலிங்க சுவாமிகள் மடாலயத்தில் அமைத்துள்ள சத்வித்யா சன்மார்க்க சங்கத்தின் 3-வது ஆண்டு நிறைவு விழா, சென்னை ஸ்ரீமான் க. சதாசிவச்செட்டியார் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் 1919 பிப்ரவரி 15-16-17 தேதிகளில் மிக்க அழகாகவும் விமரிசையாகவும் நடந்தேறியது.

இச்சங்கமானது யாவருக்கும் நன்மையைத் தரக்கூடியதாயிருப்பினும் இதில் சார்ந்துள்ள அமைச்சர், காரியதரிசி முதலானவர்களின் நோக்கம் அவ்வாறில்லை யென்பது நேரில் கண்டவிஷயத்தால் தெற்றென விளங்குகின்றது. இவ்வருடோற்சவத்தில் குருபூஜையும் மஹேசுவரபூஜையும் நடப்பது வழக்கம். அவ்வாறு நடைபெற்றும் சந்நியாசிகளுக்கும் ஏழைகளுக்கும் சிறிதும் பயனின்றி, தனவந்தர்களுக்கும் உத்தியோகஸ்தர்களுக்குமே வேண்டியவரை பயன் தரலாயிற்று. இதற்குப் பொருளுதவி செய்பவர்களோ எல்லாரும் சாமானியர்களே யாவர். இன்னவர்கள் தாகத்திற்கு வெறுஞ் சலம் கேட்க, அப்போது அமைச்சர் சொன்ன விடையைக் கவனிப்பீராக. "இங்கு உங்களுக்கெல்லாம் காபி, உப்புமா முதலியவைகளைச் செய்துவைக்கவில்லை. முக்கியமான சில பெரியமனிதர்களுக்குமாத்திரம் செய்திருப்பதால் நீங்கள் வெளியே போய்விடவேண்டும்" என்று உத்தரவு செய்துவிட்டார்கள். சந்நியாசிகளுக்கோவென்றால், கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுவதுதான் சாப்பாடும் மரியாதையுமாம்.

பெரிய மனிதர்களின் தயவுக்கும், உத்தியோகஸ்தர்களின் உறவுக்குமே இச்சங்கம் ஏற்பட்டிருக்கின்றதுபோலும்! ஏனைய பொதுஜனங்களுக்கு நல்லறிவு புகட்டுவதற்கும் யாவருக்கும் உண்மையை விளக்குதற்கும் நாங்கள் சிவபுண்ணியத்தைக் கருதி உழைக்கின்றோமென்று சொல்லுகின்றார்கள். காவி வஸ்திரத்தினாலும், உருத்திராக்கத் தாழ்வடத்தினாலும், விபூதி மேல்பூச்சினாலும், லாங்கோட் தலைப்பாக்களாலும் ஏனைய ஜனங்களை மயக்கி ரூபாய்களை வசூலித்துக்கொண்டு சமயத்தில் அவர்களை வெளியே போங்களென்று தள்ளிவிடுகின்றார்கள். இது என்ன அநியாயம்! ஏழைச் சகோதரர்கள் இப்படி இவர்கள் மூலமாகப் பொருளைக் கொடுத்துவிட்டு அவதிப்படாமலும் தர்மம் கெடாமலும் அவரவரிஷ்டப்படி தர்மத்தைச் செய்து இறைவனருளைப்பெறுதல் நலமன்றோ.

பெரிய மனிதர்கள் தயவைக் கோரி நடத்தும் இச் சங்கத்தார் சாமானியர்களிடம் ரூபாய் வசூலிக்காமலும், அவர்களுக்கு விளம்பரம் மூலமாயறிவிக்காமலும் நடத்துதலன்றோ நலம்!

இனியேனும் இச்சங்கத்தார் இத்தகைய அதர்மத்தில் நுழையாமல் யாவர்க்கும் பயன்படுமாறு சங்கத்தை முன்போல் நடத்திப் புண்ணியத்தைப் பெறுமாறு வேண்டுகின்றனன்.

உண்மை யுரைப்போன்.

1919 ஆ௵ சந்தா வரவு.

கனம்.	ரூ.	அ.
கொ. ச. க[...]ன்னுச்சாரி, வாலாஜாநகர்	1	4
தேவசி[...] ..சிதம்பர[...]ணிஆச்சாரி, செய்யூர்	1	4
R. வேங்கட[...]லம், புதுமதுரை	1	4
[...]வ. அ. இரா[...]ப்பய்யர், திருவண்ணுமலை	1	4
[...]ா. கு. முனிசாமிநாயடு, ஷை	1	4
[...]ட்டு. பார்த்[...]ாமிப்பிள்ளை, ஷை	1	4
S. M. வ[...]தசாரதிஅய்யங்கார், ஷை	1	4
[...]ரதாராஜாச்சார், ஷை	1	4
P. C. இராகவாச்சாரியார், ஷை	1	4
[...]. S. சேஷாசல அய்யர், ஷை	1	4
கா. இராமலிங்காச்சாரி, வாலாஜாநகர்	1	4
அ. குப்புசாமிசெட்டியார், வேப்பஞ்சேரி	1	4
[...]. கே. இராமலிங்கம்பிள்ளை, மறவாகாடு	1	4
[...]. திருச்சிற்றம்பலம்பிள்ளை, செங்கப்படுத்தான்காடு ...	1	4
[...]. S. S. சுப்பராயரெட்டியார், சாதம்பட்டிகிராமம் ...	1	4
[...]டாக்டர் நாராயணசாமிநாயடு, புதுவை...	1	0
விரூபாக்ஷிசெட்டியார், புதுவை	1	0
[...]. கோவிந்தசாமி ஆச்சாரி, சுல்தான்பேட்டை	1	4
[...]. P. P. சிதம்பரம்பிள்ளை, அவிநாசி	1	4
வலுமயிலும் ஆச்சாரி, வற்கலை	1	4
[...]. T. T. K. R. கதிரேசன்செட்டியார், ரங்கூன் ...	1	4
[...]காவிந்தராஜுலு ஆச்சாரி, புதுவை	1	0
[...]ரமண்யபத்தர், ஷை	1	0
[...]ஆ. குப்புசாமிசெட்டியார், ஷை	1	0
[...]திலக நாராயணசாமிமுதலியார், ஷை	1	0
[...]சி. ச. சிவசிதம்பரசெட்டியார், ஷை	1	0
[...]ா. சு. கதிர்வேல்உடையார், ஷை	1	0
அண்ணுமலைசெட்டியார், ஷை	1	0
திருநாவுக்கரசுமுதலியார், மரக்காணம்	1	4
[...]லுரெட்டியார் ஷை	1	4
[...]பால, முனிசாமிப்பிள்ளை, புதுவை	1	0
[...]ணுநாயகர், ஷை	1	0
R. வெங்கடசாமி ரெட்டியார், ஷை	1	0
[...]ஸ்டு-குப்புசாமிமுதலியார், ஷை	1	0
[...]ளி விநாயகமுதலியார் அண்டுகோ, ஷை	1	0
[...]வெங்கட ரங்கநாதநாயகர், ஷை	1	0
[...]சேஷபதிதேசிகர், கீழ்ப்படப்பை	1	4

அச்சுதநாராயணய்யர், புதுவை ... ...
பத்மநாபரெட்டியார், ஷை ... ...
ஆ. வே. முத்தையமுதலியார், ஷை ... ...
சாமி-அருணாசலசெட்டியார், ஷை ... ...
C. S. வீரராகவாச்சாரியார், திருவண்ணாமலை ... ...
மளிகை. பொ. வேங்கடாசலநாயகர், புதுவை ... ...
மளிகை. பாலகிருஷ்ணசெட்டியார், ஷை ... ...
வை. சிங்காரவேல்செட்டியார், ஷை ... ...
சிங்கப்பூர் அண்ணாமலைமுதலியார், ஷை ... ...
கணபதிபத்தர், ஷை ... ...
கலவை - சுப்பராயசெட்டியார், ஷை 1
கிரந்தே-சிவசங்கரசெட்டியார், ஷை 1
M. மாணிக்கநாயகர், கூனிச்சம்பட்டு 1
ஆனந்தூர்-மாணிக்கமுதலியார், புதுவை 1
பாலூர். வேங்கடகிருஷ்ணசெட்டியார், ஷை 1
துரைசாமிபத்தர் ஷை 1
இராஜரத்தின வேதாசலமுதலியார், ஷை 1
சிய்யாழி - கிருஷ்ணசாமிசெட்டியார் ஷை 1
கெங்காதரமுதலியார், முள்ளிப்பட்டு 1
இலக்ஷ்மண இராசுப்பிள்ளை, புதுவை 1
முத்து இராமசாமிஉடையார், ஷை 1
C. P. வடிவேலுப்பிள்ளை, ஷை 1
நெல்மண்டி அப்பாசாமிஉடையார், ஷை 1
நன்னைய பாகவதர், ஷை 1
செ. ச. கோவிந்தராசுப்பத்தர், ஷை 1
K. V. முனிசாமிசெட்டியார், ஷை 1
எ. மா. சக்ரபாணிசெட்டியார், ஷை 1
R. S. K. P. சுப்பராயசெட்டியார், முத்தியால்பேட்டை ... 1
வை. க. மாணிக்கமுதலியார், ஷை... ... 1
சிவபாக்கிய நடராஜநாயகர், புதுவை 1
கு. வேலாயுதசெட்டியார் ஷை 1
S. ஆதிசேஷ உடையார், நெல்லித்தோப்பு 1
அங்குஆச்சாரி, புதுவை 1
வைத்தியம்-பாலகிருஷ்ணநாயகர் ஷை... ... 1
கோந்த்ரேவேலர்-வேணுப்பிள்ளை, ஷை... ... 1
தி. தங்கவேலுநாயகர் ஷை... 1
டாக்டர். கோபாலசாமி ... ஷை... ... 1